**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 58** **நாள்: 04.04.2026**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்ட 3 விழிப்புணர்வுப் பேருந்துகள் (Model Vote Booth Bus) இன்று (04.04.2026) தொடங்கப்பட்டது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்கள் 26.03.2026 அன்று தொடங்கி வைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மேலும் கூடுதலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நாளில் வாக்காளர்கள் எவ்வாறு வாக்குச்சாவடி மையங்களில் தங்களது வாக்கினை பதிவு செய்வது என்பது குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்ட 3 பேருந்துகள் (Model Vote Booth Bus) இன்று (04.04.2026) முதல் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர்கள் அதிகம் கூடுமிடங்களில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பேருந்துகளில் தத்ரூபமாக வாக்குச்சாவடி தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்-1, வாக்குப்பதிவு அலுவலர்-2, வாக்குப்பதிவு அலுவலர்-3 ஆகியோரின் பணி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலமாக வாக்களிப்பது போன்று மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**